# கலைஞரும் நானும் 57

■ **ராஜமாணிக்கம், ஐ.ஏ.எஸ்.**

**“நான் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவன். அந்த வகையில், எனக்கு ஒரு தந்தையாக, கழகக் குடும்பம் என்பதால் தலைவராக, ஆட்சிப் பணியில் இருந்ததால் முதலமைச்சராக என எல்லாமுமாக எனக்கு நம்பிக்கை அளித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவருடன் 20 ஆண்டுகள் பயணம் செய்த வகையில், அவர் இல்லாத இந்த நாட்கள் எனக்குச் சோர்வைத் தருகின்றன” என்கிறார், கலைஞரின் தனிச் செயலாளராகப் பணியாற்றிய ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ்.**

## “கலெக்டரா இருந்தது போதும்யா!”



“காலையில் எழுந்ததும் முதல் அழைப்பு அவரிடமிருந்துதான் வரும். ஏதாவது ஒரு பத்திரிகைச் செய்தியைக் கூறி, அது தொடர்பான விளக்கத்தைக் கேட்பார். அதற்குரிய தகவல்களை உடனே போனில் சொல்லவில்லை என்றால், காலையில் சந்தித்ததும் முதல் கேள்வியாக அதுதான் இருக்கும்.

அது அரசு குறித்த விமர்சனமாக இருந்தால் உடனே, உரிய பதில் அளிக்க வேண்டும் என வேகம் காட்டுவார். அவரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க வேண்டுமே என்கிற எண்ணம்தான், அவருடன் பயணிப்பவர்களுக்கு இருக்கும். அந்த வகையில், கலைஞரின் வேகத்துக்குப் பின்னால்தான் நான் ஓடியிருக்கிறேன் என்பதே இந்த நாட்களில் என் மகிழ்ச்சித் தருணங்களாக நான் நினைத்துக் கொள்வேன்.

### கலைஞர் தேதி

திராவிட இயக்கப் பின்புலம் கொண்ட குடும்பம் என்பதால், கலைஞரின் பெயரை நான் சிறுவயதில் இருந்தே அறிவேன். 1961-ஆம் ஆண்டு வாக்கில் எரகுடி உயர்நிலைப் பள்ளியில் மாணவர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோது, ஆண்டு விழா நிகழ்ச்சியை கலைஞர் தலைமையில் நடத்த வேண்டும் என அன்பில் தர்மலிங்கம் அவர்களைச் சந்தித்தோம். அவரும் கலைஞர் திருச்சி வரும் தேதியைக் குறிப்பிட்டு, நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளச் சொன்னார்.

அந்த நிகழ்ச்சியில்தான் முதல்முறையாக கலைஞரைப் பார்த்து, பேசி மகிழ்ந்தேன். எனது கல்லூரிக் காலத்தில், இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமாக இருந்தன. அதில் நானும் ஈடுபட்டிருக்கிறேன். 1966-ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் கலைஞர் பங்கேற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டுக்கு நான் தலைமை வகித்தேன். இப்படி கழகத்துடனும் கலைஞருடனும் எனது தொடக்கக் காலத் தொடர்புகள் இருந்தன.

### தனிச் செயலாளர்

அதன் பின்னர், நான் அரசுப் பணியில் சேர்ந்ததும் கலைஞருடன் நெருக்கம் உருவாகத் தொடங்கியது. 1969-ஆம் ஆண்டில் மக்கள் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டேன். அதையடுத்து கலைஞரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. எனது தமிழார்வம், குடும்பப் பின்னணி எல்லாம் அறிந்தவர் என்பதால், என்னிடம் தனிப்பட்ட அக்கறை காட்டுவார்.

1989-ஆம் ஆண்டில், கலைஞர் மூன்றாவது முறையாக முதலமைச்சரானதும், அவரது தனிச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பு அளித்தார். திறமையானவர்கள் எங்கிருந்தாலும், அவர்களை அடையாளம் கண்டு பொருத்தமாகப் பணி அளிப்பதும் ஊக்குவிப்பதும் கலைஞரின் இயல்பு. அந்தப் பணியில், 1991-ஆம் ஆண்டு வரை அவருடன் இருந்தேன்.

1996-ஆம் ஆண்டில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியராக இருந்தபோது, முதலமைச்சராக நான்காவது முறை பொறுப்பேற்றிருந்த கலைஞர், திருக்கழுக்குன்றம் நிகழ்ச்சி ஒன்றுக்கு வருகை தந்தார். “மாவட்ட ஆட்சியராக இருந்தது போதும்யா”எனக் கூறி, அன்று மாலையே அவரது தனிச் செயலாளராக நியமித்து ஆணையிட்டார்.

> **“எந்த இடத்திலும் தமிழ்நாட்டின் நலனை விட்டுக் கொடுத்து நான் பார்த்ததேயில்லை. பெரியார், அண்ணா, திராவிட இயக்கத்தின் நீட்சியாகத்தான் ஆட்சி அதிகாரத்தைப் பார்த்தார்.”**

2001-ஆம் ஆண்டுவரை அவரிடம் இருந்தேன். 2005-ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றதும், அவருடனேயே இருக்கச் சொல்லிவிட்டார். அவரது இறுதிக் காலம் வரை, அவரது எண்ண ஓட்டத்தை, சிந்தனையை, செயல்படுத்தும் முனைப்புகளை உடனிருந்து கவனிக்கும் வாய்ப்பு அமைந்தது. நான் அறிந்தவரையில், உலக வரலாற்றில் கலைஞரைப் போல செயலூக்கம் கொண்ட தலைவராக யாரையும் பார்க்க முடியவில்லை.

### கருத்து அறிதல்

சமூகநலத்துறையில் ஒவ்வொரு புதிய திட்டம் அறிவிக்கப்படும்போது, அது மக்கள் மத்தியில் எப்படிச் செயல்படுத்தப் படுகிறது என அறிந்து கொள்ள விரும்புவார். ‘நீ என்ன நினைக்கிறே? வெளியில என்ன பேசிக்கிறாங்க?’ எனக் கருத்துகளைக் கேட்டுக் கொள்வார்.

‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்’, ‘பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்’ போன்ற திட்டங்களின் போது அவரே கைப்பட, அமைச்சரவைத் தீர்மானங்களை எழுதினார். அவருக்கு முதுகுத் தண்டுவடத்தில் அறுவை சிகிச்சை செய்து ஓய்வில் இருந்த நேரத்தில்தான் அருந்ததியர் உள் ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்டது.

அந்த நேரத்துக்கு மருத்துவமனையிலிருந்து நேராக சட்டமன்றம் வந்து அவையில் கலந்துகொண்டார். சமூகநீதிக் கொள்கையில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினை அந்த நேரங்களில் உடனிருந்து நான் பார்த்திருக்கிறேன்.

இந்த வேலைக்கு இவ்வளவு நேரம்தான் எனக் கணக்கு வைத்திருப்பார். அரசு உத்தரவுகளைக் கொண்டு சேர்ப்பதிலும், அந்தக் கணக்கு உண்டு. எந்த வேலையும், அந்தக் குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் தேங்கக்கூடாது என நினைப்பார். அவரின் வேகம் அறிந்து அதற்கேற்ப தயாராக இருப்போம். அப்படியும் அவர் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது.

### தமிழ்நாடு தமிழ்நாடு...

தமிழ்நாட்டைத் தாண்டி அவர் எங்கும் சென்று அதிக நாட்கள் தங்கியதில்லை. ஒன்றியத்தில் வி.பி. சிங் ஆட்சி அமைத்தபோது, டெல்லியில் பத்து நாட்கள் தங்கினார். அப்போதும் அவர் கேட்கும் கேள்வி என்பது “எப்பய்யா நம்ம ஊருக்கு போவோம்?” என்பதாகத்தான் இருக்கும். அந்த ஆட்சி அமைவதற்குக் காரணமாக இருந்தவர் கலைஞர்.

அரசுப் பயணமாக டெல்லி செல்கையில், அல்லது அலுவல் ரீதியாக ஆங்கிலத்தில் உரையாட வேண்டி இருந்தால், அவர் சொல்வதை விரிவாக என்னைப் பேசச் சொல்வார். எந்த இடத்திலும் தமிழ்நாட்டின் நலனை விட்டுக் கொடுத்து நான் பார்த்ததேயில்லை. பெரியார், அண்ணா, திராவிட இயக்கத்தின் நீட்சியாகத்தான் ஆட்சி அதிகாரத்தைப் பார்த்தார்.

### கலை ரசிகர்

அவர் இலக்கியவாதி, திரைத்துறை ஆளுமை என்றாலும், பிறர் சொல்லக் கேட்பதை ரசிப்பதில் ஆர்வம் கொண்டவர்.

நான் சினிமா ரசிகன். எந்தப் புதுப்படம் வந்தாலும் பார்த்துவிடுவேன். ஒருவகையில் நான் கடைப்பிடித்த நல்ல பழக்கங்களில் அதுவும் ஒன்று. ஏனென்றால், அந்தப் படம் குறித்து, கலைஞரிடம் பேச முடியும். சில நேரங்களில் ‘அந்தப் படத்தைப் பத்திச் சொல்லுய்யா’ எனக் கேட்பார்.

நான் ஒருமுறை லண்டன் சுற்றுப்பயணம் சென்றபோது, அங்கு ஷேக்ஸ்பியரின் இல்லத்துக்கும் சென்று வந்தேன். அங்கு பார்த்தது என்ன? என்கிற விவரங்களை ஆர்வமுடன் கேட்டுக் கொண்டார்.

எங்கு போனாலும், எந்த நேரத்திலும் அவர் சட்டைப் பையில் பேனா இருக்கும். பேனா இரவல் வாங்கியதே இல்லை. மற்றவர்களிடம் பேனா வாங்கி, ஒரு கையெழுத்துப் போட்டார் எனச் சொல்லவே முடியாது. இப்படி ஒவ்வொன்றிலும் நுணுக்கமாக அவருடன் 20 ஆண்டுகள் பயணித்ததைப் பெரும் வாய்ப்பாக நினைக்கிறேன்.

அவரின் இறுதிக் காலம் வரை அவரது செயலாளராகப் பணியாற்றிய எனக்கு, அவர் இல்லாத இந்தக் காலத்தைக் கடப்பது வருத்தமாகத்தான் உள்ளது. ஆயினும் இப்போதும், அவரது செயலாளராகவே என்னை நான் நினைத்துக் கொண்டு நாட்களைக் கடக்கிறேன். அந்த நினைவுகளே நிறைவை அளிக்கின்றன...!”

...பகிர்வார்கள்

## ஒன்றிய அரசின் அடாவடித்தனம்!

தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு தாய்ப் பல்கலைக்கழகமாம் சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு, 167 ஆண்டுகள் முடியப் போகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் நீண்ட நெடிய பயணத்தில் உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள், ஆய்வாளர்கள், பல லட்சக் கணக்கான பட்டதாரிகள் அடக்கம்.

அத்தகைய பெருமைமிகு பல்கலைக் கழகத்தை ஒரு தனியார் நிறுவனம் போல வரையறுத்து, வருமான வரி கட்டச் சொல்லியும், ஜி.எஸ்.டி. கட்டச் சொல்லியும் ஒன்றிய அரசின் நிறுவனங்களால் தாக்கீதுகள் அனுப்பப்படுவது, கல்வியாளர்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக ஆளுநரே தொடர அனுமதித்துக் கொண்டே, வருமான வரி கட்டச் சொல்வது மிகப்பெரிய நகைமுரண். அதன் உச்சமாக இப்போது வங்கிக் கணக்கை முடக்கியிருப்பதும் ஒன்றிய அரசின் அடாவடித்தனம் எனக் குற்றம்சாட்டும் கல்வியாளர்கள், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் இதுபோல வருமான வரி விதிக்கப்படுகிறதா என்ற கேள்வியையும் எழுப்புகின்றனர்.

மோடி ஆட்சியின் முதல் 9 ஆண்டுகளில் மட்டும் பொதுத்துறை வங்கிகள் 10.41 லட்சம் கோடி ரூபாய் வாராக்கடனைத் தள்ளுபடி செய்திருக்கின்றன. பெரு நிறுவனங்களின் மீது காட்டும் கரிசனத்தில், ஏழை-எளிய மக்களின் கல்விக்கும் கொஞ்சம் காட்டலாம். அதிலும் குறிப்பாக, புகழ்பெற்ற சென்னைப் பல்கலையின் பெருமையைச் சிதைக்கும் செயல் ஏற்புடையது அல்ல.

## :.ப்ளாஷ்பேக்



### மாலையில் மாலை!

1973-ஆம் ஆண்டு நான் சென்னை சட்டக் கல்லூரியில் மாணவர் அமைப்பின் செயலாளராக இருந்தபோது அன்றைய முதலமைச்சர், கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். சென்னை சட்டக் கல்லூரியில் மாலைநேர நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று மாணவர்களிடையே உரையாற்றினார். அப்போது நான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாலை அணிவித்தேன். அருகில் சட்டக் கல்லூரி முதல்வர். இன்றைக்கு என்னுடைய 70-வது வயதில் இதை எல்லாம் நினைத்துப் பெருமை அடைகிறேன்.



சிங்காரவேலு

**–ஆர்.சிங்காரவேலு, மாவட்டத் தலைவர், நாகை மாவட்ட வழக்கறிஞர் அணி**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.


அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பிரிவினை அல்ல! சுயநிர்ணய உரிமை!

**1962-இல் மாநிலங்களவை உறுப்பினரான அண்ணா, அவையில் பேசிய முதல் உரை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை. “நான் திராவிட இன வழி வந்தவன், நாங்கள் விழைவது அனைத்தும் சுய நிர்ணய உரிமையே. நாங்கள் கோரக் கூடிய தனித்திருத்தல் பிரிவினை அல்ல” என்று ஒவ்வொரு வார்த்தையையும் மிக அழுத்தமாகப் பயன்படுத்தினார் அண்ணா. இப்போது மாநில உரிமையை, பிரிவினை என்பவர்களுக்கும் அப்போதே பதில் சொல்லி விட்டார் அண்ணா.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 385




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.